# இரட்சிப்பின் நிச்சயம்




1. இன்று மரித்தாலும் பரலோகத்திற்கு செல்வோம் என்னும் உறுதியான நம்பிக்கை இருக்கும். (மரண பயம் இருக்காது). (1 கொரிந்தியர் 15:55)

2. நம்மிடமுள்ள புதிய பற்றுதல்கள், புதிய விருப்பு வெறுப்புகள் வெளிப்படும். எண்ணங்களில், நோக்கங்களில், வாழ்க்கையில் மாற்றம் ஏற்படும். (2 கொரிந்தியர் 5:17)

- பொல்லாத பழக்கவழக்கங்களின் வல்லமையும், பிரசன்னமும், ஒழிந்துபோகும். (ரோமர் 6:22)
- வேத வசனத்தின் மீதும், ஜெபத்தின் மீதும், விசுவாசிகளின் ஐக்கியத்திலும், தனிப்பிரியம் உண்டாகும்.
- பாவத்தையும் உலகத்தின் பொல்லாத வழிகளையும் வெறுக்கத் துவங்குவான்.
- இயேசுவே நம் வாழ்க்கைக்கு, எல்லாவற்றிற்கும், எல்லாமுமாக இருக்கிறார்.
- இயேசு கிறிஸ்துவுக்கு பிரியமான வாழ்க்கை வாழுவான்.

3. மாறுபட்ட வாழ்க்கை, நம்மை சுற்றிலும், நம் வீட்டிலும் உள்ளவர்கள், நம்மில் மாறுதலைக் காண்பார்கள்.

- நாம் சகோதரனிடத்தில் அன்புகூறுவோம். (1 யோவான் 3:14)
- ஒருவரிலொருவர் அன்பாயிருப்பதன் மூலம் (யோவான் 13:34,35)
- தேவனை நேசிக்க வேண்டும், உன்னை நேசிக்க வேண்டும், பிறனை நேசிக்க வேண்டும்.

4. பரிசுத்த ஆவியானவர் புதிய சுபாவத்தின் மூலம் பாவத்தை கண்டித்து உணர்த்துவார், அவ்வாறு உணர்த்தும் போது பாவத்தை அறிக்கையிட்டு விட்டுவிடு, இல்லையெனில் நீ பாவத்தை அறிக்கையிடும் வரை சிட்சிப்பார். (எபிரேயர் 12:6–11)

5. பாவமன்னிப்பு நமக்கு சமாதானத்தையும், சந்தோஷத்தையும் கொடுக்கிறது. (அப்போஸ்தலர் 8:39)

6. இரட்சிப்பை பெற்றவன் இரட்சிப்பின் மகிழ்ச்சியை பிறரோடு பகிர்ந்து கொள்வான்.

நீங்கள் மறுபடியும் பிறக்க வேண்டும்